# நல்லூர், யாழ்ப்பாணம்

## முதலாந் தவணைப் பரீட்சை - 2014

தரம் 07 சைவநெறி நேரம் 2.00 மணி

பகுதி I

மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக

1. இறைவன் உள்ளத்தின் உள்ளேயும் உள்ளத்தைக் கடந்தும் இருப்பவர் என்பதால் அவருக்கு வழங்கப்படும் பெயர்
   1 கடவுள் 2 பதி 3 ஆண்டவன் 4 ஈசன்
2. தாயின் வடிவம் தாங்கி தன் பக்தற்கு அருளிய இறைவன்
   1 திருவாரூர் இறைவன் 2 திருக்கடவூர் இறைவன்
   3 திருச்சிராப்பள்ளி இறைவன் 4 திருத்தோணிபுர இறைவன்
3. பாடசாலையில் இடம்பெறும் விசேட சமய வைபவங்களில் ஒன்று
   1 தமிழ் மொழித்தினம் 2 பரிசளிப்பு விழா 3 ஆண்டு நிறைவு விழா 4 அடிக்கல்நாட்டுதல்
4. ஆசிரியர் வகுப்பறைக்கு வரும் போது மாணவர்கள்
   1 அமைதியாக இருக்க வேண்டும் 2 எழுந்து வணக்கம் கூற வேண்டும்
   3 படித்துக் கொண்டிருக்க வேண்டும் 4 தத்தமது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும்
5. பின்வருவனவற்றுள் பஞ்சமாபாதங்களில் ஒன்று
   1 வாய்மை 2 கொல்லாமை 3 கள்ளாமை 4 பொய்மை
6. சாமகானத்தால் இறைவனை மயக்கியவர்
   1 நாரதர் 2 இராவணன் 3 பாணர் 4 கண்ணன்
7. பாடசாலை ஒழுக்க விதிகளுள் மிக முக்கியமானது
   1 நேரம் தவறாமை 2 காலைப்பிரார்த்தனையில் பங்குற்றுதல்
   3 தினமும் பாடசாலை வருதல் 4 பாடசாலை ஊழியர்களுக்கு மதிப்பளித்தல்
8. சிறு பறவைக்காக தன் உடலையே ஈந்த பெருமைக்குரியவர்
   1 மணிச்சோழன் 2 தசரதச்சக்கரவர்த்தி 3 சிபிச்சக்கரவர்த்தி 4 அசோகச்சக்கரவர்த்தி
9. வீடு கட்டும் போது அத்திவாரத்தினுள் இடம்பெறுவது
   1 குங்கிலியம் 2தண்டக்குளி மண் 3 திருவாட்டி மண் 4 கோயில் மண்
10. கிரிசாம்பாளின் கதை உணர்த்தும் விழுமியப் பண்பு
    1 சகோதரத்துவம் 2 பிறர் நலன் பேணல் 3 பெரியோரை மதித்தல் 4 பொறுமை
11. முருகப்பெருமான் உதித்த தினமாகக் கருதப்படுவது
    1 வைகாசி விசாகம் 2ஆடிப்பூரம் 3 மாசிமகம் 4ஆவணிச்சதுர்த்தி
12. புது வீடு ஒன்றை முறைப்படி கட்ட உதவும் நூல்
    1 அர்த்த சாஸ்த்திரம் 2சிற்ப சாஸ்த்திரம் 3மனையடி சாஸ்த்திரம் 4சித்தாந்த சாஸ்த்திரம்
13. மனித வாழ்வை வளம்படுத்துவதற்கு வேண்டிய நற்பண்புகள் ஒன்று
    1 நேர்மை 2 அநீதி 3 அகங்காரம் 4 இன்னாச்சொல்
14. சிவபெருமானின் திருமணத்தால் விசேடம் பெறற நாள்
    1 தைப்பூசம் 2 ஆனிஉத்தரம் 3 மார்கழித்திருவாதிரை 4 பங்குனி உத்தரம்
15. வீட்டை நிரிமாணிப்பதில் பெரும்பங்கு வகிப்பவர்
    1 சிற்பி 2 கொத்தனார் 3 கருமான் 4 கொல்லர்
16. தேவ விசேடமும் பிதிர் விசேடமும் கொண்ட மாதம்
    1 தை 2 சித்திரை 3 ஆடி 4 புரட்டாதி
17. சுக்கிரவார விரதத்திற்குரிய கடவுள்
    1 அம்பிகை, முருகன் 2 சூரியன், சந்திரன் 3 இலக்குமி, சரஸ்வதி 4 சிவபெருமான், முருகன்
18. இறைவனுக்கு தூபம் இடும் பணி செய்தவர்
    1 குங்கிலியக்கலயர் 2 கண்ணப்ப நாயனார் 3 மங்கையர்க்கரசியார் 4திருக்குறிப்புத் தொண்டர்
19. தட்சிணாயன புண்ணிய காலத்தில் கொண்டாடப்படும் பண்டிகை
    1 தைப்பொங்கல் 2 ஆடிப்பிறப்பு 3 வருடப்பிறப்பு 4 தீபாவளி
20. "வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்து" இதில் வரைகெழு மகள் எனப்படுபவர்
    1 வள்ளி 2 தெய்வயானை 3 துர்க்கை 4 உமையம்மை



kalvi.lk

## பகுதி II

01. முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக

1 பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக அவற்றைப் பாடியவர் பாடப்பட்ட தலம் என்பவற்றைக் குறிப்பிடுக

1 "நிரைகழலரவம்...................."

2 "விருது குன்றமா............."

3 "மாதர்ப்பிறைககண்ணி..............."

4 "நங்கடம்பனைப்................." (7+1/2+1/2)X2=16 புள்ளிகள்)

02. "கடவுளை நம்பினோர் கைவிடப்படார.";

1 கடவுள் ஒருவரே உண்மையானவர் என்பதை எடுத்துக் காட்டும் திருமுறைப் பாடலடிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

2 தாயுமானவர் எனும் கதை மூலம் வெளிப்படுத்தப்படும் இறைவனின் இயல்புகள் மூன்றினை எழுதுக

3 இக்கதையில் இறைவன் மூதாட்டிக்கு அருள் புரிந்த விதத்தைச் சுருக்கமாக எழுதுக.

4 இக்கதையைப் படித்த பின் உமது மனதில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைக் குறிப்பிடுக (3+2+3+3=11 புள்ளிகள்)

03. "நற்பண்புகள் வாழ்வை வளம்படுத்துகின்றன."

1 நீர் உமது வாழ்வில் கடைப்பிடிக்கின்ற நற்பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக

2 நீர் உம்மிடமிருந்து விலக்க விரும்பும் தீய பழக்கங்கள் எவை?

3 சகோதரத்துவப் பண்பை வளர்ப்பதால் நாம் பெறும் நன்மைகள் எவை?

4 இன்னா செய்தவரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" எனும் குறட்பாவின் பொருளை எழுதுக. (3+2+3+3=11 புள்ளிகள்)

04. "கல்வியையும் ஒழுக்கத்தையும்ஒருங்கே போதிக்கும் நிலையம் பாடசாலையாகும்."

1 நீர் தினமும் பாடசாலையில் கடைப்பிடிக்கும் சைவப்பழக்கவழக்கங்கள் மூன்றினை எழுதுக?

2 அவற்றைக் கடைப்பிடிப்பதால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் எவை?

3 பாடசாலையில் நீர் கற்றுக்கொண்ட நல்லொழுக்கங்கள் எவை?

4 பாடசாலையில் பின்பற்ற வேண்டிய நற்செயல்களை வலியுறுத்தும் மகுட வாசகங்கள் இரண்டினை எழுதுக. (3+2+3+3=11 புள்ளிகள்)

05. "கிருகப் பிரவேசம் இந்துக்களது சமுதாய மரபின் ஓர் அங்கமாகும்"

1 புதுமனை கட்டி குடிபுகுதல் தொடர்பாக இந்துக்களிடையே காணப்படும் நம்பிக்கைகள் எவை?

2 புதுமனை கட்ட விரும்பும் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளைப் படிமுறையில் எழுதுக

3 புதுமனை புகுதலின் போது முதலில் புதுமனைக்குள் கொண்டு செல்லப்படும் பொருட்கள் எவை?

4 புதுமனை புகுதலின் போது இடம்பெறும் கிரியைகள் எவை?

(2+3+3+3=11 புள்ளிகள்)

06. "அன்பு வழி நின்று இறைவனை வழிபட்டவர்கள் சிவனடியார்கள்"

1 பக்தி என்றால் என்ன?

2 இறைவன் மீது தீவிர பக்தி கொண்ட நாயன்மார் இருவரின் பெயர்களை எழுதுக

3 பெரிய புராணத்தில் கூறப்படும் விடயம் யாது?

4 கலயருக்கு இறைவன் அருள் புரிந்த விதத்தைச் சுருக்கமாக எழுதுக(3+2+3+3=11 புள்ளிகள்)

07. பின்வரும் அட்டணையை பூர்த்தி செய்க

| விரதம் | வழிபடப்படும் கடவுள் | விரத பலன் |
|---|---|---|
| விநாயகர் சதுர்த்தி | விநாயகர் | |
| திருக்கார்த்திகை | | |
| வரலட்சுமி | | |
| ஆடிப்பூரம் | | |

( 11 புள்ளிகள்)



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

தமிழ் Medium

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

English Medium

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457